குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.128/2020

அ.சா. 2

2025–ம் ஆண்டு நவம்பர் 17–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | தொழில் | |
| தந்தை பெயர் | காவேரி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.37 மணி,

Accused A2.Manikandan present. A1.Chinnapaiyan S/o.Arumugam died and charge abated. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் வ.உ.சி நகரில் குடியிருந்து, அரசு பள்ளியில் ஆசியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. கடந்த 26.03.2019 ஆம் தேதி இரவு எனது மனைவி வீட்டின் உள்ளே ஹாலில் சோபாவில் படுத்திருந்தார். நான் வீட்டின் வெளியே போர்டிகோவில் கயிறு கட்டில் போட்டு படுத்திருந்தேன். அப்போது வெயில் காலமாக இருந்ததால் வீட்டின் வாசற்கதவை திறந்தநிலையில் வைத்து தூங்கிக்கொண்டிருந்தோம்.

2. நள்ளிரவு குளிராக இருந்ததால் நான், வீட்டின் உள்ளே சென்று படுத்துக்கொண்டேன். என் மனைவி சோபாவிலேயே தூங்கிக்கொண்டிருந்தார். சுமார் 1/2 மணிநேரம் கழித்து என் மனைவி அலறும் சத்தம் கேட்டது. நான், எழுந்து ஓடிவந்து பார்த்தபோது, என் மனைவி செயினை அறுத்துவிட்டார்கள் என்று சத்தம் போட்டார். எங்கள் காம்பவுண்ட் சுவரை நான் சுற்றி பார்த்தேன். அக்கம்பக்கத்தினரும் வந்துவிட்டார்கள்.

3. எனது மனைவி கழுத்தில் அணிந்திருந்த தங்க தாலி செயின், அதில் காசு மற்றும் குண்டு ஆகியவற்றுடன் இருந்து மொத்தம் 8 பவுன் நகையை என் மனைவி

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:01:59 +0530

தூங்கிக்கொண்டிருந்தபோது, அவரது கழுத்தில் யாரோ தொட்டதுபோல் இருந்ததாகவும், என் மனைவி விழித்து பார்த்தபோது, துணியால் முகத்தை மூடி, கண்கள் மட்டும் வெளியில் தெரிந்த நிலையில் இருந்த நபர் என் மனைவியின் கழுத்தில் இருந்து இழுத்து அறுத்துச் சென்றுவிட்டதாக சொன்னார்.

4. நாங்கள் அருகில் இருந்த நபர்களும் சேர்ந்து டார்ச் எடுத்துக்கொண்டு அருகில் இருந்த இடங்களில் தேடிப்பார்த்தோம். ஆனால், அந்த நபரை கண்டுபிடிக்கமுடியவில்லை. பின்பு காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னோம். போலிசார் வந்து வீட்டின் உள்ளேயும், வெளியேயும் பார்த்தார்கள். பின்பு சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

5. அதன்பின்பு மறுநாள் காலை எனது மனைவி இதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பின்பு, சுமார் 6 மாதங்கள் கழித்து காவல்நிலையத்திலிருந்து எங்களை வரச்சொல்லி அழைத்தார்கள். நானும், எனது மனைவியும் காவல்நிலையம் சென்றோம். அங்கு எனது மனைவியின் கழுத்தில் இருந்து பறித்த நகைகளை நாங்கள் அடையாளம் காட்டினோம். அதன்பின்பு நீதிமன்றத்திலிருந்து மேற்படி நகையை எனது மனைவி மனு செய்து பெற்றார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

6. பொதுவாக வெயில் காலங்களில் எங்கள் வீட்டின் கதவை திறந்து வைத்துவிட்டு உறங்குவோம் என்றால் சரி. பொதுவாக இரவு 10.00 மணிக்கு உறங்குவோம் என்றால் சரி. சம்பவத்தன்று எத்தனை மணிக்கு எனது மனைவி கத்தும் சத்தம் கேட்டது என்றால் எங்கள் வீட்டிற்கு அருகில், தினமும் இரவு 01.30 மணிக்கு இரயில் போகும் சத்தம் கேட்கும். சம்பவத்தன்று மேற்படி இரயில் சத்தம் கேட்டபோது தான் எனது மனைவி கத்தும் சத்தமும் கேட்டது. அப்போது மணி 01.30 இருக்கும்.

7.எங்கள் வீட்டு வாசலில் இருந்து ரயில் தண்டவாளம் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். எனது மனைவி சம்பவம் பற்றி கூறியதன் அடிப்படையில் தான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என்றாலும், அதனடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி. சம்பவம் நடந்த உடன் நான் மட்டும் தான் டார்ச் லைட் உதவியுடன்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:02:03 +0530

எனது வீட்டிற்கு வெளியே யாரும் இருந்தார்களா என்று பார்த்தேன். பின்பு அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் சேர்த்து 3 பேர் எங்கள் வீட்டின் காம்பவுண்ட் சுவருக்கு வெளியே பார்த்தார்கள்.

8. சம்பவம் நடந்த அன்று இரவு சுமார் 4 போலிசார்கள் வந்தார்கள். அவர்கள் எங்கள் வீட்டிற்கு நடந்து தான் வந்தார்கள். வாகனத்தை வெளியே நிறுத்திவிட்டு வந்தார்களா என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த மறுநாள் எனது மனைவி மட்டும் தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். அன்றைய தினம் 10 ஆம் வகுப்பு தேர்வு இருந்ததால் அ.சா.1–வுடன் காவல்நிலையம் செல்லவில்லை. அன்று மதியம் தான் சென்றேன்.

9. புகார் கொடுத்த பின்பு, போலிசார் 4 முறை என்னை விசாரித்தார்கள். 1 முறை நேரிலும், 3 முறை போனிலும் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த 6 மாதங்கள் கழித்து காணாமல் போன நகை கிடைத்ததாக போலிசார் எங்களிடம் சொன்னதன் அடிப்படையில் நாங்கள் காவல்நிலையம் சென்றபோது நகைகளை மட்டும்தான் அடையளாம் காட்டினோம் என்றால் சரி. எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.59 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:02:06 +0530